# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.827/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாலஹரி காந்தி | த-பெ | பாண்டித்துரை |
| ஊர்: | : | கோவிலூர் | | |
| வயது: | : | 22/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.03.2026**

2 ம் **எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

<u>முதல் விசாரணை.</u>

1. நான் தற்சமயம் கோவிலூரில் வசித்து தனியார் வேலை செய்து வருகிறேன். அசா4 எனது நண்பர். கடந்த 05.09.2021 அன்று கோவிலூர் ஆண்டவர் பள்ளி பிரிவு உபசார விழா காரைக்குடி சில்வர் ஸ்பூன் ஹோட்டலில் நடைபெறுவதாக இருந்தது. அதில் கலந்து கொள்வதற்காக எங்கள் பள்ளியை சார்ந்த அனைவரும் சென்றிருந்தோம். அசா4 ற்கு காரைக்குடியில் எந்த இடமும் தெரியாது. பொதுவாக அவர் காரைக்குடி வந்தால் கோவிலூருக்கு வந்து அவரை நான் அழைத்து செல்வது வழக்கம். அன்றைய தினம் காலை 09.50 க்கு மேல் கோவிலூர் பேருந்து நிறுத்தில் அசா4 ஐ அழைத்து செல்வதற்காக நின்று கொண்டிருந்தேன். அப்போது பரமக்குடியில் இருந்து தஞ்சாவூர் நோக்கி செல்லும் அரசு பேருந்து வந்தது. அதில் கூட்டமாக பயணிகள் இறங்கி கொண்டிருந்தார்கள். நான் பின்னால் நின்று கொண்டிருந்தேன். அதில் அசா4 வருவார் என்று நான் பார்த்து கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் பேருந்து நின்று பின்னர் இயங்கியது. அப்போது அசா4 இறங்குவதற்காக படியில் நின்று கொண்டிருந்தபோது அங்கிருந்த கம்பியில் கால் மாட்டி தவறி கீழே விழுந்துவிட்டார்.

2. அதன் பிறகு நாங்கள் அனைவரும் அவரை தூக்கி மரத்தடியில் கிடத்தினோம். மேற்படி விபத்தில் அவருக்கு தலை, கால் , கை ஆகிய பகுதிகளில் இரத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவரை அதே பேருந்தில் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக ஓட்டுநர் மற்றும் நடத்துனர் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அங்கு அவரை அழைத்து செல்லவில்லை. புதிய பேருந்து நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அங்கிருந்து நான் சண்டையிட்டு அதே

பேருந்தில் PKN மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அவரை அங்கு சிகிச்சையில் சேர்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநர் ஆஜர் எதிரி தான். நடத்துனரை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும்.

**குறுக்கு விசாரணை**

1. சில்வர் ஸ்பூன் ேஹாட்டலில் பிரிவு உபசார விழா எத்தனை மணிக்கு என்றால் காலை 11.00 மணிக்கு நடைபெற இருந்தது. பேருந்து நிறுத்தில் நான் மற்றும் என் தகப்பனார் இருந்தோம். பேருந்தானது கோவிலூர் பேருந்துநிறுத்தில் எத்தனை பயணிகள் இறங்கியிருப்பார்கள் என்றால் சுமார் 10-15 நபர்கள் இறங்கியிருப்பார்கள். பேருந்தானது கோவிலூர் பேருந்துநிறுத்தில் சுமார் 2 நிமிடம் நின்றிருக்கும் என்றால் சரிதான். எனது நண்பர் தமிழ்மாறன் காரைக்குடிக்கு தான் பயணச்சீட்டு எடுத்தார் என்றால் சரிதான். காரைக்குடியில் இருந்து கோவிலூர் சுமார் ஒன்றரை கிமீ இருக்கும் என்றால் சரிதான். காரைக்குடிக்கு சென்ற அந்த பேருந்தில் நான் ஏன் ஏறி செல்லவில்லை என்றால் நாங்கள் காரில் செல்வதாக இருந்தோம். சம்பவ இடமானது கோவிலூர் பேருந்து நிறுத்தில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 10 அடி இருக்கும். எனது நண்பர் தமிழ்மாறன் என்பவர் காரைக்குடி பயணச்சீட்டு எடுத்துவிட்டு தீடீரென கோவிலூரில் பேருந்து சென்றபோது இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தானது எனது நண்பரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.13 10:27:51 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
S.T.C. No.827/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தமிழ்மாறன் | த-பெ | கண்ணன் |
| ஊர்: | : | காளையார் கோவில் | | |
| வயது: | : | 21/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.03.2026**

2 ம் **எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காளையார்கோவிலில் வசித்து தனியார் வேலை செய்து வருகிறேன். கடந்த 05.09.2021 அன்று காரைக்குடியில் உள்ள சில்வர் ஸ்பூன் ஹோட்டலில் பள்ளி பிரிவு உபசார விழா நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்காக பரமக்குடி - தஞ்சாவூர் செல்லும் அரசு பேருந்தில் நான் காலை 9.00-9.30 மணியளவில் ஏறியிருந்தேன். மேற்படி பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் யார் என்று தெரியாது. பேருந்தில் நான் பயணம் செய்து கொண்டிருந்தேன். காரைக்குடி கோவிலூர் சாலை வழியாக சென்று கொண்டிருந்தபோது பேருந்தின் நடு இருக்கையில் நான் அமர்ந்திருந்தேன். நடத்துனரிடம் நான் சில்லறை கேட்டேன். அவர் கொடுத்தார். அதை வாங்கி கொண்டு நான் கோவிலூர் ஸ்டாப்பில் இறங்க முயற்சி செய்தேன். அப்போது பேருந்து ஓட்டுநர் அதை கவனிக்காமல் பேருந்ததை இயக்கிவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். இதில் எனக்கு இடது கண் புருவம், தலை பகுதியில் காயங்கள் ஏற்பட்டு சுய நினைவு இன்றி இருந்தேன். எனது நண்பர் பாலகிரி என்பவர் தான் என்னை தூக்கினார். அதன் பின்னர் என்ன நடந்தது என்று தெரியவில்லை. கண் விழித்து பார்த்தபோது PKN மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தேன். இந்த விபத்தில் காயம்பட்ட நான் இரண்டு நாட்கள் சிகிச்சையில் மேற்படி மருத்துவமனையில் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

1. என்னை போலீசார் எப்போது எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால்

மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். வேறு எங்கும் விசாரணை செய்யவில்லை. நான் பயணச்சீட்டு எடுத்தது காரைக்குடி தான் என்றால் சரிதான். நான் காரைக்குடிக்கு பயணச்சீட்டு எடுத்து கோவிலூரில் பஸ் ஸ்டாப்பில் எப்போதுமே இறங்குவேன் என்றால் சரிதான். சம்பவ இடமானது கோவிலூர் பஸ் ஸ்டாப்பில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் எனக்கு சரியாக தெரியாது. மேற்படி கோவிலூர் பேருந்து நிறுத்தில் என்னுடன் சேர்ந்து எத்தனை நபர்கள் இறங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் பேருந்தில் அதிகமாக கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். கோவிலூர் பேருந்து நிறுத்தில் 3 நிமிடங்கள் பேருந்து நின்றிருக்கும் என்றால் சரிதான். நான் காரைக்குடிக்கு பயணச்சீட்டு எடுத்துவிட்டு தீடீரென பேருந்து நகர்ந்த பின்பு கோவிலூர் பஸ் ஸ்டாப்பில் இறங்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஓட்டுநரின் கவனக்குறைவு எதுவும் இல்லை என்றாலும் என்னுடைய அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் கோவிலூரில் இறங்கியபோது சில்லறை வாங்கிவிட்டு இறங்கினேன் என்று எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.13 10:27:57 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.